30 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றபடியால், அங்கு குறைந்தது, ஒரு நடமாடும் கால்நடை மருந்தகமாவது அமைத்துத்தர அமைசசர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981, 1991 என்று மனிதர்களுக்குத் தான் சென்ஸஸ் எடுத்துவரப்படுகிறது. கால்நடைகளுக்கு அப்படி சென்ஸஸ் எடுப்பதில்லை. ஆண்டுதோறும் எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

வினா எண் 127, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

127—

பொன்னேரி தொகுதியில் தரைமட்ட அணையைப் பழுதுபார்த்தல்

*16574—**திரு. ஏ. ரவிக்குமார் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, இடையஞ்சாவடியில் குசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள தரைமட்ட அணை பழுதடைந்துள்ளதால், அதனைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொன்னேரி தொகுதி இடையஞ்சாவடியில் குசத்தலையாற்றின் குறுக்கே உள்ள வலது அணையில் ஏதும் பழுதில்லை. இடது பக்க அணையில் சிறிது பழுது ஏற்பட்டது. அவற்றைப் பழுதுபார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்க்கும் பணிகள் 1993—ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் ரூபாய் 77,828-00 செலவில் முடிக்கப்பட்டது.

திரு. ஏ. ரவிக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது தங்களுடைய தொகுதிக்கு மட்டுமே செய்து கொள்ளக்கூடிய நிலை இருந்ததாக வரலாறு. ஆனால்

1995 மார்ச் 28]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளையும் தன் தொகுதிபோல பாவித்து ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி இந்தியாவிலே யாரும் செய்யாத ஒரு சாதனையை நிகழ்த்தி இருக்கின்றார்கள். சாலைகளைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி போடும்போது இந்த அணைக்கட்டு பழுதடைந்திருந்தது. கேள்வி போட்ட உடனேயே நிதியை ஒதுக்கி, சீர்செய்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், இது ஒரு நிரந்தரத் தீர்வாக அமைய வாய்ப்பில்லை. எனவே, நிரந்தரமாக, இதனை முழுவதுமாகப் புதுப்பித்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி போட்ட உடன் அணைக்கட்டு சீர் செய்யப்படுவதில்லை. வெள்ளம் வந்து பாதிக்கப்பட்டவுடனேயே, அங்கே அதிகாரிகள் போய்ப் பார்த்து, உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாகத்தான் இதுபோன்ற பிரச்சினைகள் எழுந்தன. உடனடியாக அதைச் சீர்செய்ய வேண்டுமென்று, வெள்ள நிவாரணப் பணிகளின் அடிப்படையில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக, நிரந்தர பாசனப் பாதுகாப்பிற்காக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசு ஒப்புதல் பெற்றவுடனே அந்த அணைக்கட்டு சம்பந்தமான பணிகள் துவங்கப்படும். அதற்கான நிதி ஆதாரத்தை நிதி நிலைமைக்கேற்ப பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தரைமட்ட அணை என்னுடைய சொந்த ஊரிலேயே இருக்கிறது. இதனால் பல நூற்றுக்கணக்கான நிலங்கள் பயனடைய வாய்ப்பு இருக்கிறது. இதற்கு அருகிலேயே குசத்தலை ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கடந்த 20 ஆண்டுகளாக, தூண்களாக இருந்தது. கனவில்கூட இதை யாரும் கட்டி முட்டிப்பார்கள் என்று நினைக்கவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பார்வையிட்ட உடனேயே, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நிதியை ஒதுக்கி, இதைக் கட்டுவதற்கான வேலையை ஆரம்பித்தார்கள். அதற்காக என்னுடைய கிராம மக்களும், தொகுதி மக்களும் நன்றி சொல்ல வார்த்தைகள்

கிடையாது. அதேபோல, இந்த அணையையும் உடனடியாகச் சீர்செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று உறுதி அளித்துள்ளார்கள். இதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய கிராமத்திலே இருந்த ஒரேயொரு குறையையும் நிவர்த்தி செய்து, எனக்கு நல்ல பெயரை எடுத்துத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த ஆண்டிலேயே இந்த வேலையானது துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீர் நிலங்களில் புகுந்து விவசாயம் பாதிக்கப்படாத வண்ணம் ஏற்கெனவே 'ரிங்பண்ட்' போன்ற அமைப்புப் பணிகளை நாங்கள் தற்காலிகமாக மேற்கொண்டிருக்கிறோம். வெள்ளநிவாரணப் பணிகள் அடிப்படையில் வேலைகள் செய்து உடனடியாக பணிகளைத் துவங்கி சரி செய்திருக்கிறோம். நிரந்தரப் பாதுகாப்புக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. ஆகவேதான், அதற்காக ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்று தெரிவித்தேன். ஆகவே, இந்த ஆண்டு துவக்கப்படுமா என்பதை உறுதியாக சொல்ல முடியாது. பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி அரசு அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நிதிநிலைமைக்கேற்ப இந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *128*, திரு. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

128—

வடுவூரில் துணை மின் நிலையம் அமைத்தல்

***35578—திரு. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி வட்டம், வடுவூர் கிராமத்தில் *33* கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?